## பிப்ரவரி - 16

**"கனத்திலும், கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும்; எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தராகவும், இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல்" - 2கொரி 6 : 8, 3.**

நாம் நமது வேலையை நமது மிகச் சிறந்த திறமைக்கு ஏற்றவாறு நிறைவேற்றும் போதும், நாம் கர்த்தரின் ஆசீர்வாதத்தையும் தயவையும் நம்மேலும் நமது காரியங்களிலும் மிகவும் நன்றாகக் கவனிக்கத்தக்க அளவில் பெற்றிருக்கும்போதும் திடீரென்று கஷ்டம் உண்டாகலாம். இடுக்கண் வரும் இருளின் அந்தகாரங்கள் வெற்றி கொள்வதாகத் தோன்றலாம். கொஞ்ச நேரம் மற்றவர்களுடைய தீர்மானத்தின்படி குற்றவாளியாகத் தெளிவாக எண்ணப்படலாம். தெளிவாக தெய்வீகப் பராமரிப்பினால் கைவிடப்படலாம். இப்படிப்பட்ட அனுபவங்கள் சந்தேகமில்லாமல் நமக்கு அவசியமானவைகளாய் இருக்கின்றன. "தனித்து வெளிச்சத்தில் நடப்பதை விட, தேவனோடு இருளில் நடப்பதையே விரும்புகிறேன்" என்று நாம் பாடினாலும், கர்த்தருடைய கரங்களைப் பற்றிக்கொண்டு மிகவும் துன்பமான சமயத்திலும் தெய்வீகப் பராமரிப்பில் நம்பிக்கை கொள்ளத்தக்க விசுவாசத்தையும் நம்பிக்கையையும், அபிவிருத்தி செய்யும் சோதனையான அனுபவங்களின் ஊடே நாம் செல்லாவிட்டால் இப்படிப்பாடுவது ஒன்றுமில்லாத தற்புகழ்ச்சியேயாகும். **- Z '01, 314 (R 2885).**

கிறிஸ்தவ ஜீவியம் எதிரிடையான அனுபவங்களைக் கொண்ட ஒரு ஜீவியமாகும். இந்த எதிரிடையான அனுபவங்களின் மத்தியில் கிறிஸ்தவன் தேவனுடைய அன்பிலும், தன்னயத்தை வெறுப்பதிலும், தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும். எவ்வளவு அன்பும், கனமும், புகழும் தேவனிடத்திலிருக்கும் உண்மைப் பற்றிலிருந்து அவனது மனதைக்கவரக் கூடாது. எவ்வளவு கனவீனமும் கெட்ட பெயரும் அல்லது குற்றச்சாட்டும் அவனுடைய இருதயத்தைக் கெடுத்து வழி தவறியவனாக மாற்றக் கூடாது. எல்லாச் சந்தர்ப்ப நிலைகளிலும் நீதியின் மேலுள்ள உண்மையான பற்றே அவனுடைய சுலோகம். இதுவே கடைசியில் வெற்றி பெற வேண்டும். **- P '33, 16.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

அப் 20:17-35; 24:16; ரோம 12:3-8; 1கொரி 2:1-8; 3:5-15; 4:1-4, 9-16; 9:12-23; 2கொரி 2:12-17; 3:1-12; 4; 5:11-21; 6:1-12; 1தீமோ 5:17; 2திமோ 2:10; எபி 13:7.

**கோபுர வாசிப்பு : Z '15, 291 (R 5773).**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் சத்தியத்திற்கு சாட்சி பகிர்வதில் நான் துன்பப்பட்டேனா? அது எவ்வாறு சம்பவித்தது? நான் அதை எவ்வாறு சகித்தேன்? பலன் என்ன?